வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
(4000 பிரதிகள்)

ஆடி - ஆவணி 2013 | எமது அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 22




# உணவுப்பொருள் வீணடிப்பை தடுக்க பிரான்ஸ்அரசு கடும் முயற்சி!

**எமது** நாளாந்த வாழ்வில் இன்றியமையாத இடம் பிடித்து விட்ட பெருவிநியோக அங்காடிகள் (Hypermarché) பிரான்சில் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிவரும் வேளை, பிரான்ஸ் அரசு பெருகி வரும் உணவுப் பொருட்களின் வீணடிப்பு தொடர்பான தனது கவலையை வெளிப்படுத்தியுள்ளது.

## ஒரு பிரான்ஸ் பிரஜை வருடத்திற்கு 20கிலோ உணவுப் பொருட்களைப் 'பூபலில்' போடுகின்றார்.

இதில் 7 கிலோ உணவு உபயோகிக்கப்படாத நிலையிலுள்ள புதிய உணவுகளாகும்.

இதை கணக்கிட்டுப்பார்த்தால் ஒரு குடும்பம் வருடமொன்றிற்கு 400 யூரோ பெறுமதியான உணவுப்பொருட்களை குப்பையில் போடுவதற்கே வாங்குகின்றனர். இது மிகவும் நியாயமற்ற செயல் என கடும் தொனியில் தனது கண்டனத்தை தெரிவித்திருக்கிறார் விவசாயத்துறை அமைச்சர்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையின்படி உலக அளவில் 1,3 மில்லியாட் தொன் அண்ணளவாக 750 மில்லியாட் யூரோ பெறுமதியான உணவுப் பொருட்கள் வீணடிக்கப்படுகின்றன. இவ் உணவுப் பொருட்கள் உலகத்தில் உணவின்றித் தவிக்கும் 868 மில்லியன் மக்களுக்கு உணவளிக்க போதுமானதாகும். மேலும் ஒரு வளர்ந்து வரும் நாட்டில் உணவுப் பொருள் வீணடிப்பு அறுவடையின் போதோ அல்லது அதன் பின்னரோ இடம்பெறுகிறது. மாறாக தொழில் துறை வளர்ச்சி அடைந்த நாடுகளில் உணவுப் பொருள் வீணடிப்பு நுகர்வாளரால் மட்டுமே நிகழ்த்தப்படுவதாக அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

பலத்த பொருளாதார பின்னடைவுகளுக்குள் சிக்கிநிற்கும் பிரான்ஸ், சிக்கன நடவடிக்கையின் ஓர் அம்சமாக உணவுப்பொருள் வீணடிப்பை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முழுமுயற்சி எடுத்து வருகிறது.

**'விளைநிலங்களையும், விற்பனை அங்காடிகளையும் வெறுமைசெய்து குப்பைத்தொட்டிகளை நிரப்புவதை நிறுத்துவோம்'**

இதற்கான திட்டத்தையும் அரசு அறிவித்துள்ளது. விவசாயத்துறை அமைச்சர் உணவுப்பொருள் வீணடிப்பை தடுக்க 11 வழிமுறைகளையும் முன்வைத்துள்ளார்.

உணவுப்பொருள் வீணடிப்பில் பிரான்ஸ் முன்னிலையில் உள்ளதாக கவலை தெரிவித்த அமைச்சர் இத் திட்டம் பாரபட்சமின்றி ஐரோப்பா மட்டுமல்ல உலக அளவிலும் முன்னெடுக்கப்படவேண்டியது என குறிப்பிட்டார்.

16ம் பக்கம் பார்க்க...

## பெரு விநியோக அங்காடிகள் :

(Hypermarché)

பாரிய இட வசதி ஆகக் குறைந்தது 2500 சதுரமீற்றர் மற்றும் பொருட்களை சுயமாக தெரிவு செய்யும் வசதி ஆகியவற்றின் அடிப்படையில் பெரு விநியோக அங்காடிகள் வரையறுக்கப்படுகின்றன. உலகத்தின் முதலாவது பெரு விநியோக அங்காடி 1963ம் ஆண்டு யூன் மாதம் 15ம் திகதி பிரான்சில் ஆரம்பிக்கப்பட்டது. இம் முதல் அங்காடி பாரிசின் தெற்குப் புறநகர்ப் பகுதியான Sainte-Geneviève-des-Bois ல் ஆரம்பிக்கப்பட்ட Carrefour ஆகும்.





ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளே 2500 வாடிக்கையாளர்களுடன் பெரு வெற்றியைப் பெற்றது. பிரான்சில் அதுவரை இருந்து வந்த கொள்வனவு முறையில் பெரு மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒரே இடத்தில் உணவு மற்றும் உணவு அல்லாத சகல பொருட்களையும் எமது சுய விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்யும் வசதி வெளி விலையிலிருந்து 15 முதல் 20 சதவீத மலிவு விலை, வாகனத் தரிப்பிட வசதிகள், பொருட்களை சேகரிப்பதற்கான வண்டில் வசதிகள் போன்ற புதிய வருகைகளால் பெருந்திரளான வாடிக்கையாளர்களை தன்வசம் சுண்டி இழுத்தது. மூன்று நான்கு வருட அவதானிப்புகளுக்குப் பின்னரே புதிய போட்டி விற்பனை அங்காடிகள் தோற்றம் பெற்றன. 1970 ல் 90 புதிய அங்காடிகள்

16ம் பக்கம் பார்க்க...

நிலா
தொடர்புகளுக்கு :
சங்கீதா அச்சகம்
39, Bld de la Chapelle - 75010 PARIS (Métro : La Chapelle)
Tél./ Fax: 01. 44. 72. 08. 94 E-mail : sangeethafrance@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிரான்சில் சரிவடையும் அந்நிய முதலீடுகள்!

ஐரோப்பிய நாடுகளின் நிதி ஸ்திர நிலையைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டினர் ஐரோப்பிய நாடுகளில் முதலிடுவதை குறைத்து வருகின்றனர். குறிப்பாக 2011 ம் ஆண்டை விட 2012 ம் ஆண்டில் வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீடு பிரான்சில் 13 வீதத்தினால் குறைந்துள்ளது.

வெளியார் நிறுவனங்களைக் கவர்வதில் இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளிற்குப் பின் பிரான்ஸ் 3 வது இடத்திலேயே உள்ளது. 2012 ம் ஆண்டில் வெளியார் நிறுவனங்கள் இங்கிலாந்தில் 697 தொழில்களையும், ஜேர்மனியில் 624 தொழில்களையும் பிரான்சில் 471 தொழில்களையும் ஆரம்பித்துள்ளன.

அத்துடன் தொழிலாளர்களிற்கான செலவு மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும்போது 40 வீதம் வரை கூடுதலாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அரசின் வரிகள் கூடுதலாகவும், நிலையற்ற தன்மையைக் கொண்டுள்ளதாகவும் வெளியார் நிறுவனங்கள் கவலை தெரிவித்துள்ளன.

வெளியார் நிறுவனங்கள் பிரான்சில் கடந்த வருடம் 10540 வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இத்தொகை 2011 ம் ஆண்டைவிட 20 வீதம் குறைவானது.

பிரான்சில் ஏற்பட்டு வருகின்ற பொருளாதார மந்தநிலையே வெளியார் முதலீடுகளுக்கான பின்னடைவாக கருதப்படுகிறது.



# Charles de Gaulle மற்றும் Orly விமான நிலைய பங்குகள் விற்பனை!

**பொருளாதார நெருக்கடி** மற்றும் வரவு செலவுத் திட்டத்தில் துண்டு விழும் பெரும் தொகையை ஈடுசெய்வதற்காக அரசு தனது சொத்துக்களிலும் கைவைக்கத் திட்ட மிட்டுள்ளது. அரசு, தான் முக்கிய பங்குதாரராக விளங்கும் பாரிசின் இரண்டு விமான நிலையங்களான சார்ல்துகோல் மற்றும் ஓர்லியின் பத்து சதவீத பங்குகளை விற்பனைக்கு விட்டது. பெரும் போட்டிகளுக்கு மத்தியில் Vinci குறூப்பும் Crédit Agricole வங்கியின் கிளை நிறுவனமான Predica காப்புறுதி நிறுவனமும் 9.5 சதவீதப் பங்குகளை வாங்கியுள்ளன. இதில் கிடைக்கப்பெற்ற 738 மில்லியன் யூரோக்களும் பொதுமக்களுக்கான நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது. 9.5 சதவீதப் பங்குகளை விற்றாலும் அரசு இன்னமும் 50.1 சதவீதப் பங்குகளுடன் முன்னிலைப் பங்குதாரராக உள்ளது. தொடர்ந்தும் அரசு தனது கையிருப்பிலுள்ள முக்கிய சில நிறுவனங்களின் குறிப்பிட்ட பங்குகளையும் விற்பனைக்கு விட திட்டமிட்டுள்ளது.



# இனவேறுபாடு காட்டிய முதலாளி தண்டனை பெற்றார்!

Montreuil பகுதியில் சிறிய புத்தக வெளியீட்டு நிறுவன உரிமை யாளரான M. Benady யூத இனத்தைச் சேர்ந்தவர். இவருக்கு Bobigny குற்றவியல் நீதி மன்றத்தால் 5000 யூரோக்கள் அபராதம் விதிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

குற்றம் : இவர் தனது வர்த்தக நிலைய சுத்திகரிப்புக்கு வேலைக்கு ஆட்கள் தேடுவதாக Pole Emploi வில் ஒரு விளம்பரத்தை கொடுத்திருந்தார். அந்த விளம்பரத்தில் 'மெக்ரப்' இனத்தவர்கள் தவிர்த்து எனக் குறிப்பிட்டிருந்தார். அதாவது வடக்கு ஆபிரிக்காவைச் சேர்ந்த அல்ஜீரியா, மொறக்கோ, துனிசியா போன்ற நாட்டு இஸ்லாமியர்கள் தவிர்த்து மற்றவர்கள் விண்ணப்பிக்க லாம் எனப் பொருள் பட குறிப்பிட்டிருந்தமைக்கே தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

யூதர்களுக்கு எப்பொழுதும் இஸ்லாமியர்களால் உயிராபத்துப் பயம் உள்ளது. அவர்களை நம்பி எப்படி வேலைக்கு அமர்த்த முடியும் எனத் தன்னிலை விளக்கமும் கொடுத்துள்ளார்.

பிரான்சில் வேலைக்கு ஆட்கள் எடுக்கும் போது இன அல்லது மத அடிப்படையில் பாகுபாடு பார்ப்பது, முற்றாக தடை செய்யப்பட்ட அணுகு முறை என நீதி மன்றம் உறுதிபடத்தெரிவித்து தண்டனை வழங்கியுள்ளது.

நேற்றுவரை தீர்ந்து விட்டாலென்ன,
இன்றும் நாளையும் மிச்சம் இருக்கிறதே!
- நம்பிக்கை


சங்கீதா அச்சகம்
01 44 72 08 94


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரான்சில் ஐந்து மில்லியனுக்கும் அதிகமானோர் தனிமையில்!

**பிரான்சில்** தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாக அல்லது தனிமையை உணர்வதாக எண்ணும் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரித்து வரு–வதாக Fondation de France எச்சரிக்கைத் தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

தனிமை நமது நவீன சமூகத்தின் பாரிய நோயாக அறியப்படுகிறது. ஒவ்வொரு மனிதரும் ஏதோவொரு தருணத்தில் தாம் ஒதுக்கி வைக்கப்பட்டு விட்டதாக அல்லது தனிமைப்படுத்தப்பட்டு விட்டதாக உணருகின்றனர். பெரும்பாலான தருணங்களில் சமூகக் கட்டமைப்பு இதற்கு முக்கிய காரணியாக இனங்காணப்படுகிறது.

பிரான்சில் 5 மில்லியனுக்கும் அதிகமானோர் சமூகத்தொடர்புகள் அற்றவர்களாக அல்லது மிகக் குறைந்தவர்களாக காணப்படுகின்றனர்.
இதில் 39 சதவீதத்தினர் குடும்பத்தினருடனான எந்தவிதத் தொடர்புகளோ, உறவுகளோ அற்றவர்களாகவும், 37 சத வீதத்தினர் பக்கத்து வீட்டு மனிதர்கள் கூட யார் என்று தெரியாதவர்களாகவும், 25 சதவீதத்தினர் நண்பர்கள் யாரும் அற்றவர்களாகவும் உள்ளனர்.

75 வயதுக்கு மேற்பட்டோருக்கு அவர்களின் இயலாமை இந்நிலைக்குத் தள்ளிவிடுகிறது. மற்றும் 18 முதல் 25 வயதிற்கு இடைப்பட்டவர் அதிகம் பாதிக்கப்பட்ட வயதினருள் அடங்குகின்றனர். 18வயதுடன் குடும்பத்தைப் பிரிந்து வெளிவந்து விடும் இவர்கள், அதே நேரம் பாடசாலை வாழ்க்கையை விட்டும் விலகி விடுகின்றனர். வேலையின்மை அல்லது திருப்தியற்ற வேலை, வதிவிட வசதிகள் அற்ற நிலை போன்றவற்றாலும் இந் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

சிலர் தங்கள் தனிமையை அவமானமாக உணர்கின்றனர். ஆதலால் சமூகத்திலிருந்து தங்களை விலக்கிக் கொள்கின்றனர். இக்காரணங்களால் அவர்கள் உதவி கோரி எந்த அமைப்புக்களிடமும் சரணடைவதில்லை. இச்சாராரை கண்டறிந்து உதவி செய்வதும் கடினமானது என்கிறார் Fondation de France நிர்வாகி.

தனிமையை விரட்டும் நவீன கருவியாக சமூக வலைத்தளங்கள் அறியப்படுகின்றன. இது ஒரு தற்காலிக போலித் தோற்றமான மருந்தே. கணனி நிறுத்தப்பட்டதும் தனிமை இருளுக்குள் அமுங்கி விடவே நேருகிறது. வெளியில் சென்று நண்பர்களைச் சந்திக்கலாமென்றால் கையில் காசு இல்லாமல் எப்படி முடியும்? தொடரும் பொருளாதார நெருக்கடியும் ஒரு முக்கிய காரணிதான் என அவர் மேலும் கருத்துத்தெரிவித்துள்ளார்.

### Fondation de France



பிரான்சில் 1969ல் ஆரம்பிக்கப்பட்ட இவ் அமைப்பு அரசுசார்பற்ற சுதந்திர தன்னார்வ தொண்டு நிறுவனமாகும்.
சுயமாக மக்களால் விரும்பிக்கொடுக்கப்படும் நன்கொடையால் இயங்கும் இவ் அமைப்பு 2009ம் ஆண்டில் 85 மில்லியன் யூரோக்களை நன்கொடையாகப் பெற்றுக்கொண்டது.



Bac 2013

## மகளுக்குப் பதிலாக பரீட்சை எழுதிய அம்மா!

பரீட்சைகள் என்றாலே அதுவும் Bac போன்ற முக்கியமான தேர்வுகள் என்றாலே பதட்டம் தான். மாணவர்களுக்கு மட்டுமல்ல பெற்றோர்களுக்கும் இந்தப் பதட்டம் தொற்றிவிடும். என்ன செய்தாவது பாஸ் பண்ணிவிட வேண்டும் என்ற அழுத்தம் தவறுகளுக்கும் வழிகோலி விடுகிறது. குதிரையோட்டம், கொப்பியடித்தல், ஆள்மாறாட்டம் இன்னமும் முன்னேறி ஸ்மார்ட் போன் பாவனை வரையிலான குறுக்கான வழி முறைகளை தேர்ந்தெடுத்துவிடுகின்றனர்.

பிரான்சில் அரசும், கல்வித்துறையும் மோசடிச் செயற்பாடுகளுக்கு எதிராக பலமாகப் போராடி வருகின்றன. விழிப்புணர்வுப் பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வருகின்றன. ஆயினும் அவை தொடரவே செய்கின்றன.

இம்முறை பலரையும் வியப்பில் ஆழ்த்திய நிகழ்வு தனது 19 வயது மகளுக்கு பதிலாக ஆங்கிலப் பரீட்சை எழுதச் சென்ற அவரது தாயார் பிடிபட்டது தான். தாய்க்கு வயது 52, தற்போதைய இளைஞர்கள் போலவே உடை உடுத்தி, இளம் பெண் போல் பரீட்சை நிலையத்துக்குள் சென்றுள்ளார். யாருமே சந்தேகப் படவில்லை. தற்செயலாக அடையாள அட்டையைப் பரிசோதனை செய்த அதிகாரியால் இனம் காணப்பட்டு ள்ளார். இது மூன்றாவது நாள் பரீட்சையாகும். முதல் இரண்டு நாளும் மகள் பரீட்சை எழுதியிருந்தார். அவரின் அடையாள அட்டையை பரிசோதனை செய்தவரும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. அதிகாரி கொடுத்த தகவலின் படி பரீட்சை நிலையத்தில் வைத்தே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதில் பாதிப்புக்கு உள்ளானது என்னவோ அவரது மகளின் எதிர்காலமே. இவ்வாறான ஆள் மாறாட்டம் மேற்கொண்டதற்காக அவர் 6 மாதம் முதல் 5 வருடங்களுக்கு Bac முதற் கொண்டு எந்த வித அரச பரீட்சைகளிலும் பங்கெடுக்க முடியாது. இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளுக்கு தண்டனை மேலும் கடுமையாயிருக்கும் என பிரெஞ்சு கல்வித்துறை எச்சரிக்கிறது.


எமது அச்சகத்தின் விளம்பர வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

• **சார்ட் திருயாத்திரை**

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப்பணியகத்தின் சார்ட் திருத்தல திருயாத்திரை 26.05.201 ல் நடைபெற்றது

• **இலக்கிய மாலை**

கவிஞர் வி.ரி இளங்கோவன் அவர்களின் நூல்கள் அறிமுக விழா 02.06.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

• **கழுகு நிழல் நூல் வெளியீடு**

கோவை நந்தனின் கழுகுநிழல் நூல் வெளியீட்டு விழா 25.05.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

• **தமிழ் மொழித் தேர்வு**

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை யால் நடாத்தப்பட்ட அனைத்துலக தமிழ்மொழித் தேர்வு 01.06.2013 அன்று பாரிசில் நடைபெற்றது.

• **விளையாட்டு விழா**

புனர்வாழ்வு கழகத்தால் நடாத்தப்பட்ட 16வது தமிழர் விளையாட்டு விழா 07.07.2013 அன்று Le Bourget ல் நடைபெற்றது.

• **மூன்றாம் உலகப்போர்**

கவிப் பேரரசு வைரமுத்து அவர்களின் மூன்றாம் உலகப் போர் நூல் வெளியீட்டு விழா 15.06.2013 பாரிசில் நடைபெற்றது.

• **வெற்றிக்கிண்ணப் போட்டி**

தூய ஒளி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணப்போட்டிகள் 16.06.2013 அன்று Vincennes இல் நடைபெற்றன

• **தாம் தீம் தகதிமி தா - 2013**

பிரான்ஸ் கலை பண்பாட்டுக்கழக ஆதரவுடன் தமிழர் சங்கங்களின் கூட்டமைப்பு நடாத்திய தாம் தீம் தக திமி தா 29.06.2013 அன்று Aulnay sous Bois இல் நடைபெற்றது.


• **இல்ல விளையாட்டுப் போட்டி**

தமிழ்ச்சோலை தலைமைப் பணியகமும் தமிழ்ச்சங்கங்களின் கூட்டமைப்பும் நடாத்திய இல்ல விளையாட்டுப் போட்டி 23.06.2013 அன்று Sarcelles இல் நடைபெற்றது.

• **அரங்கப் பட்டறை**

தமிழர் கலாச்சார ஒன்றியம், தமிழ் அரங்கு இணைந்து நடாத்திய அரங்கப் பட்டறை 07.07.2013 தொடக்கம் 21.07.2013 வரை பாரிசில் நடைபெற்றது

எமது எட்டிய நிகழ்வுகளை மட்டுமே பதிவிடுகிறோம்.
ஆனாலும் பிரான்சில் மாதாந்தம் இன்னும் நிறையவே தமிழர் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. - நிலா



# அன்டிபயோட்டிக் : எச்சரிக்கை

*பிரான்சில் உடல் நலம் சரியில்லாமல் மருத்துவரிடம் சென்றால் நிச்சயமாக மருந்துச்சீட்டில் அன்டிபயோட்டிக் மாத்திரைகள்(Antibiotiques) எடுக்கப் பணிக்கப்பட்டிருப்போம். ஐரோப்பிய அளவில் பிரான்ஸ் அன்டிபயோட்டிக் பாவனையில் முன்னிலையில் உள்ளதாக தேசிய மருந்துப் பாதுகாப்பு அமைப்பின் (ANSM) அறிக்கை தெரிவிக்கின்றது.*

*2000ம் ஆண்டு ஆரம்பங்களில் செயல்திறன், வீரியத்தின் அடிப்படையில் அன்டிபயோட்டிக் குறைவான பயன்பாடு ஊக்குவிக்கப்பட்டது. இருப்பினும் குறைவான பாவனையே பதியப்பட்டது. ஆனால் 2000 முதல் 2012 வரையான கடைசி 5 வருடங்களில் பாவனை விகிதம் கிடுகிடுவென உயர்ந்து விட்டது. இந்நிலை தொடர்ந்தால் 2011–2016 வரையான காலப்பகுதியில் இன்னும் உயர வாய்ப்புகள் உள்ளதாலேயே ANSM எச்சரிக்கை மணியை அடித்துள்ளது.*

*தற்போது மருந்தகங்களில் 84 வகை அன்டிபயோட்டிக்களே பாவனையில் உள்ளன. 2000ம் ஆண்டில் 103 வகைகள் பாவனையில் இருந்தன. பின்னர் 20 நீக்கப்பட்டு 9 புதியவை சேர்க்கப்பட்டுள்ளது. ஆண்களிலும் பார்க்க பெண்களே அதிக அளவு அன்டிபயோட்டிக் எடுப்பவர்களாக உள்ளனர். மற்றும் நகரப்பகுதி மருத்துவர்களாலேயே அதிக அளவு அன்டிபயோட்டிக்குகள் நோயாளிகளுக்கு எழுதப்படுகிறது. அதிகளவு எழுதப்படும் அன்டிபயோட்டிக் Amoxicilline எனவும் ANSMதனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.*



## சுயகௌரவம்

பலபேர் முன்னிலையில்
ஒருபோதும்
உங்கள் குழந்தையை
திட்டி, குறை சொல்லி
வேதனைப் படுத்தாதீர்.
குழந்தைகளுக்கும்
சுய கௌரவம் உண்டு,
எந்த வயதானாலும்


சங்கீதா அச்சகம்
01 44 72 08 94




*என் தந்தையின்
முகம் பார்த்துப் பேசாத
பிள்ளை நான் ......*

*இன்று என் மகன்
என் தோள் சாய்ந்து
விளையாடும் போது ...*

*என் இதயம் கனக்கிறது
என் தந்தைக்காய் ....* - Rouvrier

**பொருட்களை பயன்படுத்துங்கள்
மனிதர்களை நேசியுங்கள்
மாறாக பொருட்களை நேசித்து
மனிதர்களை பயன்படுத்தாதீர்கள்!**


அன்பின் குரல்
www.anbinkural.com
ஞாயிறு திருவழிபாடு
(வானொலி நிகழ்ச்சி)
மறைக்கல்வி, திருவிவிலியம்,
திருச்சபையின் செய்திகள்
இணைந்து பயன் பெறுங்கள்!


## சென்.பற்றிக்ஸ் நிர்வாகிகள்

02.06.2013ல் பாரிசில் நடைபெற்ற சென்பற்றிக்ஸ் ப.மா.சங்க பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் சங்கத்தின் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | திரு. A.V. டேமியன் |
| உப தலைவர் | திரு. A. பிரான்சிஸ் ஜெறாட் |
| செயலாளர் | திரு. M.S. செல்வகுமார் |
| உப செயலாளர் | திரு. J.E அன்ரனி குயின் |
| பொருளாளர் | திரு. சார்ள்ஸ் தேவசகாயம் |
| உறுப்பினர்கள். | திரு. A.T.A. செல்வராஜா |
| | திரு. A.J. ராஜேஸ்வரன் |
| | திரு. C. பெர்னான்டோ |
| | திரு. B. கிங்ஸ்லி |
| கணக்காய்வாளர் | திரு. N.M. ஜெயரட்ணம் |
| போசகர் | திரு. K.J. பாக்கியராஜா |



எமது அச்சகத்தின் விளம்பர வெளியீடு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்சில் அதிகரித்து வரும்
# உள்ளூர் நாணயங்கள்



பிரான்சின் சில நகரங்களில் உள்ளூர் நாணயங்கள் பாவனைக்கு வந்துள்ளன. யூரோவுக்கு நிகரான இந் நாணயங்கள் தனி நபர் அல்லது அமைப்புக்களினால் உருவாக்கப்பட்டுவருகின்றன. அரச ஆதரவோ அல்லது சட்டச் சிக்கலோ இல்லாத இந்நாணயப் பரிமாற்றம் உள்ளூர் பொருளாதார உற்பத்திக்கு உறுதுணையாக அமையும் என்கின்றனர் அதன் தோற்றுவிப்பாளர்கள்.

பிரான்சில் ஏற்கனவே Toulouse pays Basque, Brest உட்பட 18 பகுதிகளில் உள்ளூர் நாணயப் பாவனை புழக்கத்தில் உள்ளது. இவை தவிர்த்து இன்னும் 50 இடங்களில் இத் திட்டத்திற்கான முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

பிரான்சின் முதலாவது உள்ளூர் நாணயம் பிரான்சின் தென் மேற்குப்பகுதியான Villeneuve-sur-lot ல் 2010 ல் உதயமானது. இன்று சிறப்பான முறையில் மக்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 114 வர்த்தக நிறுவனங்களில் பின்பற்றப் படுகிறது. மற்றும் இதுவரை 150 000 யூரோக்கள் மாற்றப்பட்டுள்ளன. பாரிசின் கிழக்குப் புறநகர் பகுதியான Montreuil (93) யிலும் உள்ளூர் நாணயம் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இது வெற்றியளிக்கும் பட்சத்தில் பாரிஸ் நகரத்திற்கும் இத்திட்டம் எடுத்துச் செல்லப்படும் என்கின்றனர் அதன் தோற்றுவிப்பாளர்கள்.

## பிரான்சில் இரட்டைப் பதவிக்குத் தடை!

பிரான்சில் சில பாராளுமன்ற உறுப்பினர்களும், மேற்சபை (Sénateurs) உறுப்பினர்களும் இரட்டைப் பதவிகளை வகிக்கின்றனர். இதற்கு எதிரான சட்ட மூலம் 9 யூலை 2013 இல் பாராளுமன்றத்தில் 300/228 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்ததாக செனட் சபையிலும் இச்சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டால் இரட்டைப் பதவி வகிப்பதற்கு பிரான்சில் தடை ஏற்படும்.

பிரான்சின் பாராளுமன்றத்தில் 577 உறுப்பினர்களும், செனட் சபையில் 348 உறுப்பினர்களும் உள்ளனர். அவர்களுள் பாராளுமன்றத்தில் உள்ள 17 உறுப்பினர்களும் செனற்சபையில் உள்ள 10 உறுப்பினர்களும் தற்போது ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளை வகிக்கின்றனர்.

நகரபிதா, துணை நகரபிதா போன்றவை இரட்டைப் பதவிகளுள் முக்கியமானவையாகும். அத்துடன்
Conseiller Générale
Consillier Municipal
Consillier Régional
Membre de la commune
Member de la Commune d'agglomération
President de la Commune de Rural
ஆகியோர் பாராளுமன்ற செனற்சபை உறுப்பினர்களாவதற்கு தடங்கல்கள் ஏற்பட உள்ளன.



## இலத்திரனியற் சிகரெட்
### ஈ சிகரெட் (E - Cigarette)

பிரான்சில் 5 இலட்சம் மக்கள் (அரை மில்லியன்) இந்த புதிய வகை சிகரெட்டைப் பாவிக்கத்தொடங்கியிருக்கின்றனர்.

ஈ - சிகரெட்டில் புகை போன்ற ஆவி ஒன்றை உள் இழுக்கும் முறை வழமையான சிகரெட்டில் உள்ளமை போன்று இருப்பதோடு இதன் பெயரையும் அமைப்பையும் ஒத்திருக்கின்றது. ஆனால் புகையிலையை எரிப்பது போன்ற நடவடிக்கைகள் இதில் இல்லை.

கூடுதலான நேரம் புகை பிடிப்பது போன்ற உணர்வு நீடித்திருப்பதற்காக உணவில் சேர்க்கப்படும் பொருள் ஒன்று ஈ – சிகரெட் தயாரிப்பில் பாவிக்கப்படுகின்றது.

ஈ – சிகரெட் குறைந்த வெப்ப நிலையில் ஆவியை உருவாக்கக் கூடியதாகவும் அன்னாசி, அப்பிள், தேன், சொக்கலேட் போன்ற வேறுபட்டமணங்களை கொடுக்கக் கூடியதாகவும் தயாரிக்கப்படுகின்றது.

ஈ – சிகரெட்டை பொது இடங்களில் பாவிப்பதற்கும் பராயம் வராதவர்கள் நுகர்வதற்கும் தேவையான தடைகளை இனிமேல்தான் அரசு அவசர அவசரமாக நடைமுறைப்படுத்த வேண்டி உள்ளது.

தற்போது புதிதாக வெளிவந்துள்ள இலத்திரனியற் சிகரெட்டும் உடல் நலத்தைப் பாதிக்குமா என்ற கேள்விக்கு இன்னும் தெளிவான விடை இல்லை.

இந்தவகை சிகரெட்டுகளை புகைப் பிடிப்பவர்களுக்கு மட்டுமே விற்கவேண்டுமெனவும், ஏனையோரை புகைப் பிடிக்கத் தூண்டாதவகையில் விற்பனை செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### பிரான்சில்
## விவேகானந்த சபை
### சமய பாடப் பரீட்சை

எதிர்வரும் நவம்பர் 10ம்திகதி பிரான்சில் நடைபெறும் மேற்படி பரீட்சை தொடர்பான மேலதிக விபரங்களுக்கு Choisy-le-Roi அஸ்டலக்சுமி தேவஸ்தானத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி. 01 48 52 98 19
06 80 61 35 38
06 80 61 04 69
09 80 75 01 90


ஆர்.ரி.எம். பிறதர்ஸ்
வழங்கும்
21வது கலைத்தென்றல்
10வது பாட்டுத்திறன் போட்டி
21. 09. 2013




எமது அச்சகத்தின் விளம்பர வெளியீடு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் பகிர்வு

அமரர்
**அஜிதா லிங்கநாதன்**
முதலாம் ஆண்டு நினைவு
(பிரான்ஸ்)
தோற்றம் : 04.08.2000
மறைவு : 01.07.2012



அமரர்
**கனகசபை கனகம்மா**
தோற்றம் : 14.07.1924
மறைவு : 28.11.2012



அமரர்
**முத்துவேலு சீவரத்தினம்**
தோற்றம் : 22.12.1957
மறைவு : 01.05.2013



அமரர்
**நவரத்தினராஜா தனிஜன்**
(மல்லாவி)
தோற்றம் : 23.09.1983
மறைவு : 03.06.2013



அமரர்
**நாகலிங்கம் சச்சிதானந்தம்**
(சுதுமலை)
தோற்றம் : 10.12.1928
மறைவு : 28.06.2013



அமரர்
**மகேந்திரம் சிவகுமார்**
(அராலி)
தோற்றம் : 26. 03. 1978
மறைவு : 01. 07. 2013



அமரர்
**செல்லத்துரை கண்மணிஅம்மா**
(இணுவில்)
தோற்றம் : 06. 05. 1940
மறைவு : 15. 07. 2013




அமரர்
**வி. பொன்னுத்துரை (குமரன்)**
(மாதகல்)
தோற்றம் : 14. 04. 1954
மறைவு : 18. 07. 2013



**2013 Bac** இளநிலைக் கல்வியின் முதல் கட்டப் பரீட்சை விடைத் தாள் ஒன்று திருத்துவதற்கு வழங்கப்பட்ட ஊதியம் 5 யூரோ ஆகும். மொத்தமாக 4 மில்லியன் விடைத்தாள்கள் திருத்தப்பட்டன.


அல்லையூர் செய்திகளை படிக்க
**http://www.allaipiddy.com**


## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 06



**மேலிருந்து கீழ்**

2. சொற்களால் கோர்க்கப்பட்ட எழுத்திலக்கியக் கலை வடிவம்: காதலிக்கு காதலன் காதல் கடிதங்களில் எழுதுவதும் இதே(3)
3. காமதேவனின் இன்னுமொரு பெயர் : சிம்பு நடித்த திரைப்படமும் கூட (5)
4. நடிப்பவன் (4) (குழம்பியுள்ளான்)
5. வயலை இப்படியும் அழைக்கலாம்(5)
6. செல்வந்தன் (4)
8. வரதட்சணை (குழம்பியுள்ளது) (4)
10. .... பூப்பூவாய்த் தூவும், தேகம் என்னவாகும் பாடல் வரியின் முதற் சொல் (5)
12. உளநலம் (5)
13. சங்ககாலப் புலவன் (4)
15. மும்மூர்த்திகளில் ஒருவர் வைணவக் கடவுள் (4) (குழம்பியுள்ளார்)

**இடமிருந்து வலம்**

1. ஒரு மொழியில் உள்ள சொற்களை அகர வரிசைப்படி தொகுத்து அதற்கான பொருளை வழங்கும் நூல் (4)
3. பாம்பாட்டியின் இசைக்கருவி (3)
5. பார்த்திபன் நடித்து வெளியான திரைப்படம்(5)
8. இராமரின் மனைவி (2)
9. இரவின் இருளை விலக்கும் இயற்கையின் வரப்பிரசாதம் (2)
11. தடையற தாக்க திரைப்பட இசையமைப்பாளர் (3)
14. இடிக்கு முன்னர் வருவது (4)
16. வயதில் இளைய உடன் பிறப்பு (3)
17. .......... இட்டார் பெரியோர் இடாதோர் இழிகுலத்தோர் - ஔவையார். பூமி என்றும் பொருள் படும் (3)
18. ஆறு (2)
20. குயில் (3)

**வலமிருந்து இடம்**

7. புகழேந்திப் புலவரின் நளவெண்பாவில் தமயந்தியின் கணவன் (3)
19. கலகக்காரனால் மேற்கொள்ளப்படுவது (4)

✔ உங்கள் பதில்களை 10 செப்ரெம்பர் 2013 இற்கு முன்னர் தபாலில் அனுப்பி வைக்கவும்
✔ சரியான பதில்கள் எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

● நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.5ல் பரிசு பெறுபவர்கள்.

1. ஸ்ரிபனி (Drancy)
2. என். செல்வநாதன் (Fosses Sur Villliers)
3. எம். மதியரசு (Sarcelles)

● பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில்வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!

● சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

● சரியான விடையை அனுப்பியவர்களின் முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

• அனுப்ப வேண்டிய முகவரி •
**NILA,** 39, Bd. de la Chapelle - 75010 PARIS

## வயதானோரின் வாகன ஓட்டுனர் உரிமம் மீள் பரிசீலனை!



எதிர்காலத்தில் பாதுகாப்பு காரணமாக வயதானோரின் வாகன ஓட்டுனர் உரிமம் மீள் பரிசீலனைக்கு உள்ளாகுமா? இது பற்றி கருத்து தெரிவித்த "லு பரிசியன்"(Le parisien) நாளிதழ், "நாங்கள் எல்லோரும் வயதானவர்களாக வரும் போது வாகனம் ஓட்ட பயப்படுவோம்" என தெரிவித்துள்ளது. இந்த திட்டம் நல் நோக்கு கொண்டது போல்தெரிந்தாலும், வயதானவர்கள் மீது பாரபட்சம் காட்டுவதாகவே அமைந்துவிடும் என்று கருத்துகள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இத்திட்ட சட்டமூலம் விடயமாக செனட் சபை உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் வயதானவர்கள் மிகக் குறைவான விபத்துகளையே ஏற்படுத்துவதாகவும் அவர்கள் குற்றவாளிகள் இல்லாமல் இருப்பதாகவும் கூறியுள்ளார். இவ்விடயம் சம்பந்தமாக ஆய்வு செய்வதற்கு செனட் சபையில் ஓர் குழு அமைக்கப்பட்டுள்ளது.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள கறுப்பு வெள்ளை போட்டோ கொப்பி மெஷின் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 01 42 51 80 78







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரான்சில் உருவாகும் வைன் நாகரீக நகரம்!

பிரான்சுக்கும் வைனுக்கும் இணை பிரியாத உறவு உள்ளது என்றால் அது ஒன்றும் மிகையல்ல. உலக அளவில் வைன் உற்பத்தியில் பிரான்ஸ் முதலாவது இடத்தில் இருப்பது இதற்குச் சான்று. இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகள் வைன் உற்பத்தியில் முன்னிலையில் இருந்தாலும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, சிலி, தென் ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் வைன் வகைகள் தற்போதைய நவீன காலப் பிரபல்யமாக இருந்தாலும், பிரான்ஸ் நாட்டு வைனுக்கு தனிப்பாரம்பரியமும் நாகரீகமும் உள்ளது. வைனை தனியே ஒரு மதுவாகக் கருதாமல் மருத்துவக் குணங்கள் உள்ள பானமாகவும் கருதப்படுகிறது. ஆனால், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதான்'

பிரான்சில் வைன் என்றால் போர்தோ (Bordeaux) என்று சொல்பவர்களும் உண்டு. உலக அளவில் வைன் தேசங்களின் தலைநகர் என்று Bordeaux விளங்கப்படுகிறது. உலகெங்குமிருந்து ஆண்டுக்கு 3 மில்லியன் வருகையாளர்கள் திராட்சை தோட்டங்களைப் பார்வையிடுவதற்காகவும் தயாரிப்பு முறைகளை அறிவதற்காகவும் பிரத்தியேகமாக வைன் பதப்படுத்தும் நிலையங்களில் வைனைச் சுவைப்பதற்காகவும் Bordeaux வுக்கு வருகை தருகின்றனர்.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு "ஏன் நாம் வைனை பற்றி மட்டும் பேசும், கொண்டாடும், புரிந்து கொள்ளும் ஒரு இடத்தை ஏற்படுத்தக் கூடாது?" என்ற கேள்விக்கு வடிவம் கொடுத்துள்ளார் Bordeaux வின் தற்போதைய மாநகர அதிபர் ALAIN JUPPE. 63 மில்லியன் பொருட் செலவில் 24000 சதுரமீற்றர் பரப்பில் வைன் நாகரீகங்களின் நகரம் உருவாக இருக்கிறது. Bordeaux வில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்ட நிலையில் 2015 ல் திறக்கப்படவுள்ளது. Cité des civilisations du vin திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் என்ன? என்னவெல்லாம் வருகையாளர்களுக்கு முன்வைக்கப் போகிறீர்கள் என்ற கேள்வி ALAIN JUPPE யிடம் முன் வைக்கப்பட்டது. முக்கிய நோக்கம் உல்லாசப்பயணிகளை மட்டுமல்லாமல் எமது நாட்டவர்களையும் ஏன் போர்தோவைச் சேர்ந்தவர்களையும் இங்கு வர வைப்பது, இந்நாகரீகத்தின் பெருமை–களை – செய்திறனைப் பறை சாற்றுவது. மற்றும் உலகத்திலுள்ள சகல வைன் வகைகளையும் சுவைக்கவும், வைன் சார் விஞ்ஞானக் கல்வியான Oenologie க்கு தேவையான சகல தகவல்களையும் பெறவும் முடியும். எவ்வாறு தயாரிப்பது, பதப்படுத்துவது, பாதுகாப்பது போன்ற விளக்கங்களும் வழங்கப்படும். முற்றிலுமாக வைன் பற்றி மட்டுமே பேசப்படவுள்ளது எனத் தெரிவித்துள்ளார். ○

# சொந்த வாகனங்கள்



# உதவியா? உபத்திரவமா?

பிரான்சில் 84 சதவீத குடும்பத்தினர் வாகன உரிமையாளர்களாவர். இவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரு வாகன உரிமையாளர்களாவர். கடந்த ஆண்டுகளை விட 2012 வாகனச் செலவீனங்கள் அதிகமான ஆண்டாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எரிபொருள் விலை, நெடுஞ்சாலைச் சுங்க வரி, வாகனக்காப்புறுதி மற்றும் வாகனப் பராமரிப்புச் செலவீனங்கள் ஆகியவற்றின் விலை அதிகரிப்புகளே இந்நிலைக்கான முக்கிய காரணிகள்.

2012 ல் பெட்ரோல் வாகனத்திற்கு 6049 யூரோக்களும், டீசல் வாகனத்திற்கு 7991 யூரோக்களும் அண்ணளவான செலவீனங்களாகக் கணிக்கப்பட்டுள்ளது. இது 2011 இலும் பார்க்க 5 சதவீதம் அதிகமான செலவீனமாகும். இச்செலவீனங்களில் முக்கிய பாத்திரம் வகிப்பது எரி பொருள் விலையுயர்வேயாகும். எரி பொருள் விலை உயர்வுக்கு எரி பொருள் மீது விதிக்கப்பட்டுள்ள அதீத வரிகளே காரணம் என வாகன உரிமையாளர்கள் சார் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

என்னதான் இருப்பினும் வாகனங்கள் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் இன்றியமையாதவையாகத்தான் இருக்கிறது. 2012ல் பிரான்சில் புதிய கார் வாங்குவதற்காக சராசரியாக 22486 யூரோக்கள் செலவிட்டுள்ளனர்.

# உயர்ந்து செல்லும் பல் மருத்துவச் செலவுகள்



சத்திர சிகிச்சையாளர்கள் மற்றும் மயக்கவியலாளர்களின் செலவுகள் உயர்ந்திருப்பது வழமையானதாகும். ஆனால் பல் மருத்துவரின் செலவுகளும் பிரான்சில் வாடிக்கையாளர்கள் தாக்குப் பிடிக்க முடியாத அளவிற்கு உயர்ந்து செல்கின்றது. 2012ம் ஆண்டில் பல் மருத்துவத்திற்காக தனியார் மருத்துவர்களிற்கு 7 மில்லியாட் யூரோக்கள் செலுத்தப்பட்டுள்ளன. இரண்டு வருடங்களில் இத்தொகை 9 வீதத்தினால் அதிகரித்துள்ளது. ஒப்பீட்டளவில் பல் மருத்துவர்களின் கட்டணங்களே உயர்ந்ததாக உள்ளது என நுகர்வோர் நலன்புரி அமைப்பு கருத்து வெளியிட்டுள்ளது.

60 மில்லியன் பேர் வரை பிரான்சில் மருத்துவர்களிடம் சிகிச்சைக்கு ஆலோசனை கேட்பவர்களாக உள்ளனர். இவர்களுள் 83வீதமானோர் அரசின் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட கூடுதலாக மருத்துவ ஆலோசனைக்கு செலவிட வேண்டிய சூழ் நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரிஸ் நகரில் பாவனையில் இல்லாத வீடுகளுக்கு அதிக வரி!

பாரிஸ் 1, 4, 6, 8 போன்ற நகர வட்டாரப் பகுதிகளில் 15 வீதமான வீடுகள் முழுமையான பாவனையில் இல்லாது வெறுமையாக உள்ளன. செல்வந்தர்களிற்கான இவ் வீடுகள் அவர்கள் பாரிஸில் தங்கியிருக்கும் ஒரு சில நாட்கள் மட்டுமே பாவனையிலுள்ளன. இவற்றில் ஆட்கள் நிரந்தரமாக வசிக்க ஆவன செய்ய வேண்டுமென பாரிஸ் நகர கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் முன்முயற்சி எடுத்து வருகின்றனர்.

பாரிஸ் மாநகரில் 87 000 வீடுகள் இரண்டாவது வதிவிடங்களாக இருப்பதாக 2009ம் ஆண்டிற்கான Insee என்ற தேசிய புள்ளிவிபரக் கணக்கு நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது.

2012ம் ஆண்டிலிருந்து முழுமையான பாவனையில் இல்லாதிருக்கின்ற வீடுகளிற்கு அதிக வரி விதிப்பதற்கு எடுத்த முயற்சிகள் இன்னும் முற்றுப் பெறாத நிலையில் உள்ளன. எனினும் கூடுதல் வரிவிதிப்பு வீட்டு உரிமையாளர்களை தங்கள் வீடு–களை வாடகைக்கு விட அல்லது விற்பனை செய்ய தூண்டும் என பாரிஸ் மாநகரசபையின் ஒரு பகுதி உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

# வாகன இருக்கைப்பட்டி



**வாகன இருக்கைகளில்** நாம் அணியும் பாதுகாப்புப் பட்டிகளின்(La ceinture de sécurité) உபயோகம் கட்டாயமாக்கப்பட்டு 40 வருடங்கள் ஓடி விட்டன. வாகனப் பயணங்களில் நமது பாதுகாப்புக்கு இன்றியமையாத உபயோகமாக இப்பட்டிகள் செயற்படுகின்றன. ஐரோப்பாவில் பிரான்சே முதல் நாடாக இச்சட்டத்தை அமுல்படுத்தியது. ஆரம்பத்தில் நகருக்கு வெளியே கட்டாயமாக்கப்பட்டது. 1972ல் மட்டும் 16645 பேர் வீதி மரணங்களில் உயிரிழந்தனர். இதையடுத்தே இச்சட்டம் அமுலாக்கப்பட்டது. ஆரம்பத்தில் வெறும் 20 சதவீதத்தினரே இம்முறையைப் பின்பற்றினர். பின்னர் 1979ல் நகருக்குள்ளும், 1990ல் பின் இருக்கையில் இருப்பவர்களுக்கும் கட்டாயமாக்கப்பட்டது.

## உலகின் செல்வந்தப் பெண்மணி



Liliane Bettencourt

2013ம் ஆண்டின் செல்வந்தர் பட்டியலில் பில் கேற்ஸ் (Bill Gates) தொடர்ந்து முதலாவது இடத்தில் உள்ளார். இவரின் சொத்து மதிப்பு 51.6 மில்லியாட் யூரோக்களாகும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பெண்களுள் லிலிஆன் பெத்தன்கூர் (Liliane Bettencourt) உலகின் முதல் தர செல்வந்தப் பெண்மணியாக உள்ளார். இவரின் சொத்து மதிப்பு 24.6 மில்லியாட் யூரோக்களாகும்.

Bill Gates



## அரச நிறுவனங்களில் தவறுகள்...




மனிதர்கள் போலவே கணனிகளும் தாராளமாகவே தவறிழைக்கின்றன. இத்தகைய தவறுகளினால் கடந்த 2012ம் ஆண்டு, பிரெஞ்சு வேலை வாய்ப்பு நிறுவனமான Pole Emploi 81 கோடி யூரோக்களையும், சமூக கொடுப்பனவு நிறுவன–மான Allocations Familiales 11 கோடி யூரோக்களையும் கூடுதல் கொடுப்பனவு செய்துள்ளன. Allocations Familiales 18000 பேருக்கு இத்தகைய கூடுதலான கொடுப்பனவை வழங்கியுள்ளது. தவறுகள் கண்டறியப்பட்டபின் ஒரு பகுதி நிதி மீள அறவிடப்பட்டுள்ளது.

## உலகின் முதல் தர காதல் நகர்




**காதலர்கள்** தங்கள் முதற் சந்திப்பிற்கான இடமாக தேர்ந்தெடுக்கும் நகரங்களில் பாரிஸ் நகரமே உலகின் முதலாவது இடத்தில் இருக்கின்றது. (Premier Rendez Vous) கருத்துக் கணிப்பொன்றின் படி (TNS Sofres) தேர்ந்தெடுக்கப்படும் நகரங்களில் பாரிஸ் 24 வீதமாகவும், றோம் 23 வீதமாகவும், லண்டன் 12 வீதமாகவும் இருக்கின்றன.

### நிரந்தர வதிவிடம் இல்லாதவர் தூக்கில் தொங்கி சாவு!


42 வயதுடைய வீடில்லாத ஆண் ஒருவர் பாரிஸ் 16 போர்த்தோபின் (Porte Dauphine) பகுதியில் மரம் ஒன்றில் தூக்குப் போட்டு தனது உயிரை மாய்த்துக்கொண்டார். வாழ்வதற்கு வீடில்லாத இவரின் பொருட்கள் சுப்பர் மார்சே (Supermarché) தள்ளு வண்டி ஒன்றில் இவர் இறந்த இடத்தின் அருகில் காணப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சின் முதல் முதல்தர சைவ உணவகம்

# கிருஷ்ண பவான்






**உங்கள் விழாக்களுக்கு தேவையான தரம், சுவைமிக்க சைவ உணவுகள், பலகாரங்களோடு நேர்த்தியான முறையில் விழாக்களை நடாத்தியும் தருகிறோம்**

**கிருஷ்ணபவான் சைவ உணவகம்**

21et 24, Rue Cail, 75010 Paris.
M°: La Chapelle ou Gare du Nord

தொடர்புகளுக்கு : செல்வம்

**Port : 06 98 28 08 58**
**Tel : 01 42 05 78 43**

www.krishna-bhavan.com / www.krishnabhavan.net

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதிய சுருதித்தட்டு வகுப்புக்கள் ஆரம்பம்

(SYNTHESIZER - PIANO)

**ஆரம்பமாகும் திகதி : 08/09/2013**

பிரதி ஞாயிறு தோறும்
தமிழ், பிரான்சு, ஆங்கில மொழிகள் ஊடாக.

பாடத்திட்டம்

சர்வதேச இசைக்குறியீட்டு முறை, கர்நாடக சங்கீத இசைக்குறியீட்டு முறை,
இசைப் பொது அறிவு, ஒலித்தொழில் நுட்பமும், நவீன ஒலிப்பதிவு முறையும்.

சான்றிதழ்கள் : (Diploma)
தயார்ப்படுத்தல்
• OFAAL 1-7

தமிழ், பிரான்சு, ஆங்கில மொழிகள் மூலம் தயார்ப்படுத்தப்படும்.

இடம் : பாரிஸ் 18 (Métro : Marx Dormoy ou La Chapelle)
வயதெல்லை : 6 வயது தொடக்கம்.
இடங்கள் மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

**தொடர்புகளுக்கும் - முன்பதிவுகளுக்கும் தமிழ்ச்செல்வன் 06 20 76 28 77.**










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26th year

Mohan Jewellery Mart

# 26 வருட சேவை

# மோகன்

எங்கள் மகிழ்ச்சி
உங்களோடு ப







எமது 26வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெறும் சிறப்பு தங்கநகை விற்பனையில் நீங்களும் கலந்து கொண்டு எம்மிடம் தங்க நகைகளை தெரிவுசெய்து உங்கள் பெயர், முகவரி என்பவற்றை அதிர்ஷ்ட கூப்பனில் பதிந்து பெட்டகத்திலிடுவதன் மூலம் அதிர்ஷ்டக் குலுக்கலில் பங்குபற்றி பரிசில்களை வெல்லுங்கள்

## அதிர்ஷ்ட கூப்பன் சலுகை:

## 10யூன் 2013 - 08 செப்ரெம்பர் 2013

MJm
Since 1987

**Tél.: 01 42 05 65 26 - Fax : 09 50 31 01 82**

**201, rue du Fg. St. Denis - 75010 Paris**

(M°: La Chapelle / Gare du Nord) E-mail : mohanjm@hotmail.fr


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 வது ஆண்டு நற்செய்தி பெருவிழா

# Festival de Bonnes Nouvelles










**காலம் :**

**யூலை 29**

**முதல்**

**ஆகஸ்ட் 4**

**வரை**

(திங்கள் முதல் ஞாயிறு வரை)

**இடம் : தலைமைச் சபை**
**215, Avenue du Président Wilson**
**93210 La Plaine Saint Denis**
RER 'B' - La Plaine Stade de France
RER 'D' - Stade de France, St-Denis
RER B Bus 153 : 3e Arrêt pont de Soissons
(Direction Porte de la Chapelle)
Métro 12: Porte de la Chapelle
+Bus 153 : 5ème arrêt Pont de Soissons
(direction Stains-Moulin Neuf)

**நேரம் :**

**திங்கள் - மாலை - 6 மணிக்கு**

**செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி**
காலை 10 மணிமுதல் மாலை 5 மணிவரை
மாலை 6 மணிக்கு அபிஷேக அற்புத ஆராதனை

**ஞாயிறு - மாலை - 4 மணிக்கு**
விசேஷித்த ஆராதனை

மனிதர்கள் நல்ல வார்த்தை பேசுபவர்களை விரும்புகிறார்கள்!
மனிதர்கள் நல்ல செய்தி சொல்பவர்களை விரும்புகிறார்கள்!
மனிதர்கள் நல்ல கதை பேசுபவர்களை விரும்புகிறார்கள்!
மனிதர்கள் நல்ல காரியம் கேட்க விரும்புகிறார்கள்!

ஆனால் இதே மனிதர்கள் கெட்ட வார்த்தை, கெட்ட செய்தி, கெட்ட கதை, கெட்ட காரியம் பேசுபவர்களாக மாறி மற்றவர்களுக்கு எதிரிகளாக மாறிவிடுகிறார்கள்.

அன்பானவர்களே உண்மை என்ன, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சொன்ன வேத வார்த்தை மாறாது. இக்கூட்டங்களுக்கு வந்து நல்ல செய்தி கேளுங்கள். நல்ல சுகம், விடுதலை, ஆசீர்வாதம், ஆறுதல், அமைதி, சமாதானம், சந்தோசம் பெறுவீர்கள்.

"இது தான் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தி"
**வாருங்கள் .... வாருங்கள் ... நற்செய்தி கேளுங்கள்!**

தொடர்புகளுக்கு : 06 99 11 19 68 / 06 64 93 62 37
06 03 79 58 02 / 06 51 12 65 85 / 06 07 54 40 62
06 26 93 37 91 / 06 09 98 06 95
Tél / Fax : 01 49 98 23 20 / 06 61 18 95 30

## சீயோன் சுவிசேஷ சபை EGLISE EVANGELIQUE DE SION

PARIS - FRANCE N°. D'ENREGISTREMENT : 1/00084

# BABY பேபி பலூன்

## Balloon Decoration டெக்கரேஷன்

















- கேக்
- மணவறை
- வீடியோ
- போட்டோ
- உணவுகள்
- மண்டப ஒழுங்குகள் மற்றும் உங்கள் விழாக்களுக்கான அனைத்து ஒழுங்குகளுக்கும்

**Port : 06 13 06 20 29 / Tel : 01 39 80 85 23**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரான்ஸ்: நிர்வாக நடைமுறைகளை இலகுபடுத்த பிரதமர் திட்டம்!

**2014ம் ஆண்டிலிருந்து** பிரான்சில் உள்ள நிர்வாக நடைமுறை-களை இலகுபடுத்துவதற்கான 201 திட்டங்களை பிரான்சின் பிரதமர் ஜோன்-மார்க்-அய்றோ (Jean-Marc-Ayrault) வெளியிட்டுள்ளார். அவற்றுள் சில .

- தற்போது 10 வருட காலம் செல்லுபடியாகின்ற அடையாள அட்டை இனிமேல் 15 ஆண்டு களிற்கு செல்லுபடியாகும். இவை 2004ம் ஆண்டிலிருந்து வழங்கப் பட்டவைக்கும் பொருந்தும்.

- தற்போது சம்பளம் எடுக்கும் 35 இலட்சம் ஊழியர் ரிக்கற் றெஸ்ரோறன்ட் பாவிக்கின்றனர். இனி, இவற்றிற்கு பதிலாக மீள்நிரப்பு அட்டைகள் பயன்பாட்டிற்கு வரும்.

- சாரதி அனுமதிப் பத்திரத்தில் தங்கள் புள்ளிகளின் தொகை தற்போது மிகவும் சலிப்பூட்டுகின்ற முறையிலேயே தெரிந்து கொள்ள முடியும் இனிமேல் இவற்றையும் இணையத்தில் பார்க்கலாம்.

- வாகன உரிமையாளர்கள் தங்கள் Carte de grise பெறுவதற்கான பணம் செலுத்துவதற்கு நீண்ட நேரம் காத்திருக்கத் தேவையில்லை. இணைய மூலம் செலுத்த முடியும்.

- தற்போது சமூகநலவீடுகள் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தனித்தனியாக அந்தந்த மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவேண்டும். இனி, ஒரு விண்ணப்பமே போதுமானது. அது அனைத்து மவட்டங்களுக்கும் செல்லுபடியாகும்.

- 10 ஊழியர்களுக்கு குறைவாக தொழில் புரியும் நிறுவனங்கள் தங்கள் வருடாந்த கணக்கறிக்கையை பகிரங்கமாக வெளியிடவேண்டிய அவசியமில்லை.

இவ்வாறு பிரதமரால் பரிந்துரைக் கப்பட்ட திட்டங்கள் பகுதி பகுதி யாக நடைமுறைக்கு வர உள்ளன. இவ்வாறு அரச அறிக்கை தெரிவிக்கின்றது.

அதிக செல்வந்தர்கள் என அரசு மதிப்பிடும் குடும்பத் தவர்களுக்கு குடும்ப உதவித் தொகையை (Allocation famille) குறைக்க 68 சதவிகிதமான பிரான்ஸ் மக்கள் ஆதரவு தெரிவித்து ள்ளனர்.


## ரூபி அச்சகம்

போட்டோ கொப்பி
மற்றும்
அச்சுப்பதிப்பு
வேலைகளுக்கும்
நாடுங்கள்!

**10, Rue Labat - 75018 Paris**
**Métro : Marcadet Poissonniers**


## 45 கோடி யூறோக்கள் வங்கி அட்டை மூலம் மோசடி!

2008ம் ஆண்டில் இருந்து 2012 வரை பிரான்சில் வங்கி அட்டை மூலம் 450 மில்லியன் யூறோக்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது.

வங்கி அட்டை மூலம் இடம்பெறும் மோசடியை அவதானிக்கும் அமைப்பு, மொத்த பரிமாற்றத்தில் 8.08 வீதம் பிரான்சில் மோசடி செய்யப் பட்டுள்ளதாக அண்மை யில் அறிவித்துள்ளது. மோசடி யின் ஏறிச் செல்லும் வளர்ச்சி வீதம் சர்வதேசத்திற்கு ஈடாக 11.2 வீதமாக 2011 / 2012 காலப்பகுதியில் உள்ளது. வெளிநாடுகளில் தங்கி இருக்கும் போது களவாடப்பட்ட வங்கி அட்டைகள் மூலமே பெருமள-வான மோசடிகள் இடம் பெறுகின்றன. அத்துடன் கோடை பருவ காலத்தில் மோசடி உச்ச நிலைக்குச் செல்கின்றது.


பணம் வழங்கும் தானியங்கி இயந்திரங்கள் உடைக்கப் படு-வதன் மூலம் ஏற்படும் இழப்பு இரண்டாவது இடத்தில் இருக் கின்றது.

ஆனால் இணையம் மூலம் இடம் பெறும் வர்த்தகத்தில் நடைபெறும் மோசடியின் அளவு குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## என்ன தெரியும் அப்பாவுக்கு?

மகன்

5 வயதில் : என் தந்தையால் செய்ய முடியாதது ஒன்றும் இல்லை.
7 வயதில் : என் தந்தைக்குப் பல விஷயங்களைப் பற்றி நன்கு தெரியும்.
10 வயதில் : என் தந்தைக்கு எல்லா விஷயங்களைப் பற்றியும் தெரியாது.
12 வயதில் : என் தந்தைக்கு ஒன்றுமே தெரியாது.
14 வயதில் : அவரா? அவருக்குக் காலம் மாறியது எங்கே புரிகிறது?
21 வயதில் : கிடக்கிறார் அவர். அவரிடம் போய் யோசனை கேட்பதா?
35 வயதில் : ஏதோ கொஞ்சம் தெரியும்.
40 வயதில் : அவர் என்ன நினைக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்வதில் தப்பில்லையே
45 வயதில் : அவரின் யோசனையைக் கேட்டு, பின் முடிவு எடுக்கலாமே.
50 வயதில் : என் தந்தையார் இது போன்ற விஷயங்களில் எவ்வளவு சிறப்பாகத் தீர்மானம் எடுப்பார் தெரியுமா?
55 வயதில் : அவர் இல்லாதது உண்மையிலேயே பெரிய கஷ்டமாக இருக்கிறது. அவரின் ஆலோசனையைக் கேட்க முடியாமல் போனது பெரிய நஷ்டம்.
60 வயதில் : அவருடைய அறிவும் அனுபவமும் எங்கே? நான் எங்கே........?



Mohan - FB




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஐரோப்பாவில்
மக்களைக்கவரும் நகரங்கள்!

**ஐரோப்பிய நாடுகளில்** லண்டனுக்கு அடுத்து வீட்டு விலை அதிகமான தலை நகரங்களின் பட்டியலில் பாரிஸ் நகரம் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது. சராசரியாக ஒரு சதுர மீற்றர் வாடகையாக லண்டனில் 10000 யூரோக்களும் பாரிசில் 8300 யூரோக்களும் கணக்கிடப் பட்டுள்ளன. பாரிஸ், லண்டன், பேர்லின் பிராங்போட், பராக் (Prague) போன்ற நகரங்கள் பலராலும் வாழ விரும்பும் நகரங்களாக உள்ளன. Munich சதுரமீற்றர் 5000 யூரோவாகவும், டென்மார்க் தலைநகரான Copenhague 3068 யூரோவாகவும் மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரம், ஒப்பீட்டளவில் குறைவான விலை போன்றவற்றால் மக்களைக் கவருகின்றன. இந்நாடுகளில் 70 சதுர மீற்றர் வீடு வாங்க 2 வருட சம்பளம் தேவைப்படுகிறது. மாறாக ரஸ்ய தலை நகர் மொஸ்கோவில் சதுரமீற்றர் 4141 யூரோக்கள். இதே வீடு வாங்க ஒரு ரஸ்யப்பிரஜைக்கு 10 வருடச் சம்பளம் தேவைப்படுகிறது.




### முதலாவது ஒருபாலினத் திருமணம்

ஒரு பாலினத்தவர்களுக்கான திருமணச் சட்ட அமுலாக்கலின் பின்னர் பிரான்சின் முதலாவது திருமணம் Bruno வுக்கும் Vincent க்கும் நடைபெற்றது. இத்திருமணம் மே மாதம் 30ம் திகதி Montpellier ல் நடைபெற்றது.

HLM

பாரிஸ் மாநகரில் மட்டும் தற்போதைய நிலையில் 130 000 குடும்பத்தவர்கள் சமூக நல வீடுகளுக்காக (HLM) காத்திருக்கின்றனர்.




**சவுதி அரேபிய** அரச குடும்பத்தவர்களால் மே மாதம் 22 முதல் 24 வரை Disneyland Paris தனிமைப் படுத்தப்பட்டது. 70 பேர் கொண்ட Al saud குடும்பத்தினர்கள் தாங்கள் மட்டும் கொண்டாடிச் சுற்றிப் பார்த்து களிப்புற குறிப்பிட்ட பகுதிகளுக்குச்செல்ல பொது வரவாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. இதற்காக அவர்கள் செலுத்திய கட்டணம் வெறும் 40 மில்லியன் யூரோக்கள் மட்டுமே.

## கோடை விடுமுறை


2012ம் ஆண்டைப் போல் இவ்வருடமும் 70 சதவீதமான பிரான்ஸ் நாட்டவர்கள் கோடை விடுமுறை எடுக்கவுள்ளனர். இருப்பினும் வெறும் 48 சதவீதமானவர்களே விடுமுறைப் பயணங்களை மேற் கொள்ளவுள்ளனர். மீதமுள்ளவர்கள் தங்கள் வீட்டுத்தோட்டத்திலோ, அல்லது தங்கள் பகுதியிலோ Pique - nique செய்ய இருப்பதாகவே தெரிவிக்கின்றனர்.





## 'குசினியர்' தேவை

Mairie St.Ouen என்ற
இடத்திலுள்ள
இந்திய உணவகத்திற்கு
நல்ல சமையலாளர்
தேவை.
உடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு :
09.53.78.14.09


**பிரான்சில்** மருந்துகளின் பக்க விளைவால் ஆண்டுதோறும் 18000 பேர் வரை பலியாவதாக 1982 – 2000 ஆண்டு காலப்பகுதியில் மருந்தக இணை கண்காணிப்பு ஆணைக்குழு உறுப்பினராக பணியாற்றிய டாக்டர் பேர்னாட் பெகோட் (Dr. Bernard Bégaud) தெரிவித்துள்ளார். 27.05.2013 நந்தேரில் (Nanterre) மேடியேத்தர் (Médiator) மருந்து நிறுவனம் ஒன்றிற்கு எதிராக நடைபெற்ற வழக்கொன்றிலேயே இத்தகவலை தெரிவித்தார்.



## கார்களிலும் கறுப்புபெட்டி!

எதிர் வரும் காலங்களில் பிரான்ஸில் ஓடும் வாகனங்களில் ஆகாய விமானங்களில் பயன்படுத்தப்படும் பிளைட் ரெக்காட்டர் ( Flight Recorder) என்னும் கறுப்புப்பெட்டி ( Boite Noire) சிறிய அளவில் பொருத்தப்பட உள்ளது .

சாலைகளில் ஏற்படும் விபத்துக்களின் காரணம் கண்டறியவே
இந்த புதிய யோசனையை பிரான்ஸ் அரசாங்கம் விவாதித்து செயல்படுத்த விருக்கிறது

- Rouvrier

## ஈழத் தமிழர் திரைப்படச் சங்கம்

30.6.2013ல் நடைபெற்ற பிரான்ஸ் ஈழத்தமிழர் திரைப்படச் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர் : திரு. றொபேட்
உபதலைவர் : திரு.விக்ரம் றெஜினோல்ட்
செயலாளர் : திரு. வதனன்
பொருளாளர் : திரு. சதீஸ்
செயற்குழு உறுப்பினர்கள்
: திரு.என்.எஸ் ஜனா
: திரு. சிறிதயாளன்
: திரு. அகீபன்

lift

### ○ மகிழ்ச்சி

மகிழ்ச்சியுள்ள மனிதனுக்கே வாழும் கலை தெரிந்திருக்கிறது. தான் வாழும் சூழலையும் மகிழ்ச்சியானதாக மாற்றக்கூடிய வல்லமை அவனிடம் இருக்கிறது.

**நல்ல நகைச்சுவை நம்மை மருத்துவரிடம் செல்லவிடாமல் பாதுகாக்கிறது.**


சங்கீதா அச்சகம்
01 44 72 08 94





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு அரசியலில் மீண்டும் சார்க்கோஸி



கடந்த 6 மே 2012 ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் நிக்கோலா சார்க்கோஸி அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார். இவர் அரசுத் தலைவராக இருந்த போது UMP (union pour un mouvement populaire) கட்சியில் பிளவுகள் இருந்தாலும் ஓர் கட்டுக் கோப்பிற்குள் இருந்தது.

சார்க்கோஸி பதவி இழந்த பின்னர் கட்சியில் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக முன்னணி உறுப்பினர்களிடையே போட்டி சூடு பிடித்திருந்தது. 18 நவம்பர் 2012 இல் இடம்பெற்ற கட்சித் தலைவருக்கான போட்டியில் முன்னணியில் இருந்த கட்சித் தலைவர் ஜோன் பிரான்சுவா கோப்பே (Jean François Copé) மற்றும் பிரான்சுவா பியோன் (François Fillon) இருவரும் ஒருவர் மீது ஒருவர் மோசடிக் குற்றச்சாட்டுகளை வசை பாடிய வண்ணம் இருந்துள்ளனர்.

இதன் காரணமாக கட்சி அனுதாபிகள் சோர்வடைந்ததோடு கட்சியின் நிதி நிலைமையும் மோசமடைந்தது.

30 யூன் 2013 இல் இடம் பெற்ற கட்சித் தேர்தலில் ஜோன் பிரான்சுவா கோப்பே கட்சித் தலைவரானார். இவர் 2015ம் ஆண்டுவரை தலைவராகப் பதவி வகிப்பார்.

முன்னாள் ஜனாதிபதியின் மீள் வருகை கட்சியின் முன்னணித் தலைவர்களை ஒன்றிணைத்துள்ளதோடு கட்சி உறுப்பினர்களிடையே ஓர் ஆர்வத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

பிளவுபட்டிருந்த கட்சித் தலைவர்கள் கட்சி உறுப்பினர்கள் போன்ற 500 இற்கும் மேற்பட்டோர் பங்கு பற்றிய கூட்டத்தில் சார்க்கோஸி மிகுந்த வரவேற்பிற்கிடையே அரை மணி-நேரம் உரையாற்றினார். இது, இவர் ஜனாதிபதித் தேர்தலில் தோற்ற பின்னர் இடம் பெற்ற முதலாவது கட்சிக் கூட்டமாகும்.

கட்சித் தலைவர்கள் வேறுபாடு-களை மறந்து செயற்பட வேண்டு மென்றும் அரசியற்பன்முகத் தன்மையை பேண வேண்டும் என்றும் கூறியதோடு, தான் விலகி இருக்காது பொறுப்புக்களை ஏற்பதாகவும் கூறி கட்சியின் முன்னணி உறுப்பினர்களை உற்சாகப்படுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான செலவில் 1 கோடி யூரோக்களிற்கு கூடுதலான(11 மில்லியன்) பணம் UMP கட்சியால் பட்ட கடன் மீள செலுத்தப்பட வேண்டி உள்ளது. மீதிக் கடனை அடைக்க சார்க்கோஸியின் வருகை உதவுவ தோடு சிலகாலம் கட்சி கட்டுக் கோப்புடன் இருக்கவும் வாய்ப்பு ள்ளது.



# ஓய்வூதிய நிதி பற்றாக்குறை!

**பிரான்சில்** 2011ம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்க 1300 கோடி யூரோக்களை (13 மில்லியாட்) அரசு கடன்பட்டுள்ளது. இந்நிலை தொடருமாயின் 2020ம் ஆண்டில் 2100 கோடி யூரோக்களை (21 மில்லியாட்) இதற்காக கடன்பட வேண்டியசூழ்நிலையில் உருவாகும்.

தற்போது பிரான்சில் 62 வயதில் முழுமையான ஓய்வூதியம் எடுப்போர் 41 1/2 ஆண்டுகள் வேலை செய்திருக்க வேண்டும். வேலை செய்ய வேண்டிய காலம் மேலும் அதிகரிக்கப்பட உள்ளது. இதற்கான சரியான திட்டமிடலை செய்யுமாறு சமூக சுகாதார (Affaires Sociales et de la santé) அமைச்சர் மறிசொல் தூறென் (Marisol Touraine) கேட்கப்பட்டுள்ளார்.

தற்போது ஓய்வூதியம் பெறுபவர் களிற்கான நிதி, வேலை செய்பவர்கள் சம்பளத்தில் இருந்து ஒரு பகுதியும் வேலை வழங்குனரிடம் இருந்து ஒரு-பகுதியும் பெறப்படுகின்றது. ஆனால் இத்தொகை போதியதாக இல்லை என்று அரசுத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இன்றைய நிலையில் ஓய்வூதியம் பெறுபவர் ஒருவருக்கு 1,7 என்ற எண்ணிக்கையில் ஆட்கள் வேலை செய்கின்றனர். இத்தொகை 30 வருடங் களின் முன்னர் ஒரு ஓய்வூதியம் பெறுபவருக்கு 4 பேர் வேலை செய்துள்ளனர்.

தற்போதைய நிலைமையைச் சரி செய்ய, ஓய்வு பெறும் வயதெல்லை நீடிப்பதையே தொடர்ந்து அரசுகள் செய்த வண்ணம் உள்ளன. எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என அரசு வெளிப்படையாக தெரிவிக்க வில்லை.

ஆனால் பிரதமர் ஜோன் மார்க் அய்றோ ஓய்வூதிய வயதெல்லையில் மாற்றம் செய்யப்படமாட்டா தெனவும், ஏற்றத் தாழ்வுகள் குறைக்கப்படும் எனவும் கூறியுள் ளார்.

ஆனால் அரசுகள் தொடர்ந்து வேலை செய்யும் வயதெல்லையை அதிகரித்த வண்ணம் உள்ளதாகவும் மக்களின் வாழ்நாட்களும், உடல் நலமும் குறைந்து வருவதாகவும் இடது சாரிக் கட்சியைச் சேர்ந்த ஜோன் லூக் மிலோன்சொன் கருத்துரைத்துள்ளார்.


பாரிஸ் ஸ்ரீ மாணிக்கவிநாயகர்
தேர்த்திருவிழா






எமது அச்சகத்தின் விளம்பர வெளியீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழத்தகுதி அற்ற வீடுகளை வாடகைக்கு விடுவோருக்கு எதிராக நடவடிக்கை!

– வீட்டு வாரியத்துறை அமைச்சர்

பிரான்சில் வீடு வாடகைக்கு எடுப்பது மிகவும் சிக்கலான பிரச்சினை. சரியான பதிவுகள், நிரந்தர வேலைகளில் இருப்பவர்களுக்கே வாடகைக்கு வீடு எடுக்கக் கேட்கப்படும் ஆவணங்கள், தகுதி– களைப் பார்த்தால் தலை சுற்றும். இதில் சரியான பதிவுகளோ, நிரந்தர வேலையோ இல்லாதவர் களின் நிலை? பொதுவாக வெளிநாட்டவர்களின் நிலை? சொல்லவே தேவையில்லை.

இந்தக் குறிப்பிட்ட பகுதியினருக்கு வீடுகளை அல்லது அறையை பல நேரங்களில் அடிப்படை வசதிகள் கூட இல்லாமல், சுகாதாரமற்ற நிலையில், அதிக விலைக்கு வாடகைக்கு விடுபவர்கள் பிரான்சில் 'Marchands de sommeil' என அழைக்கப்படுகிறார்கள். பிரான்சில் இவ்வாறு தகுதியற்ற நிலையில் மக்கள் வசிக்கும் 500,000 இடங்களில் 1 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள்.

இவ்வாறு அடிப்படை வசதிகள் இல்லாத வீடுகளை வாடகைக்கு விடுவோரை தண்டனைக்கு உட்படுத்த அமைச்சர் சட்டம் கொண்டு வரவுள்ளார். வீடு வாடகைக்கு விடுவதற்கான சட்டதிட்டங்களுக்குள் அமையாத பட்சத்தில், வீட்டு உரிமையாளர் ஆவன செய்து கொடுக்க வேண்டும். தவறும் பட்சத்தில் சரி செய்து கொடுக்கும் வரை நாளுக்கு 200 யூரோக்கள் விகிதம் அபராதம் விதிக்கப்படும். அபராத விரிப்புக்கும் அடங்காத பட்சத்தில் அவர் சொத்துக்களை வாங்கவோ விற்கவோ முடியாத நிலைக்குத் தள்ளப்படுவார். இச்சட்ட மூலம் 26 யூன் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.



# விபத்தில் சிக்கிய புகையிரதம்

12.07.2013 வெள்ளிக்கிழமை பாரிஸின் புற நகர்ப்பகுதி Bretigny இல் புகையிரதம் ஒன்று விபத்திற்குள்ளானது. விபத்தில் 6 பேர் கொல்லப்பட்டதோடு 30 பேர் படுகாயமுற்றுள்ளனர். 200 பேர் வரை பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

புகையிரதத்தின் வழித்தடத்தை மாற்றி அமைக்கும் இடத்தில் பொருத்தப்பட்டிருந்த 10 கிலோ எடையுள்ள இரும்புப் பாகம் கழன்று இடையூறு ஏற்படுத்தியிருந்தமையே விபத்திற்கான காரணமாக கண்டறியப் பட்டுள்ளது.

இவ்வாறு பொருத்தப்பட்டுள்ள 5000 இரும்புப் பாகங்களை SNCF பணியாளர்கள் உடனடியாக பரிசோதிக்க உள்ளனர். விபத்து இடம்பெற்ற பகுதி ஆடிமாதம் 4ம் திகதி சரிபார்க்கப்பட்டதாகவும் அரைமணி நேரத்திற்கு முன்னர் இதே வழித்தடத்தில் வேறு ஓர் புகைவண்டி பயணித்துள்ளதாகவும் SNCF அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இது மனிதத் தவறா? அல்லது சதிவேலை ஏதும் உள்ளதா எனவும் ஆய்வுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.



# அதிகரித்துச்செல்லும் வதிவிடப் பிரச்சினை!

2001ம் ஆண்டில் இருந்து நிரந்தர வசிப்பிடம் இல்லாதோர் (SDF - sans domicile fixe) தொகை ஐம்பது சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இறுதியாக எடுக்கப்பட்ட கணிப்பின் படி 141500 பேர் நிரந்தர வசிப்பிடம் இல்லாதவர்களாக உள்ளனர். இவர்களுள் 40 வீதம் பெண்களாவர். அத்துடன் 30 000 குழந்தைகளும் நிரந்தர இடம் இல்லாமல் பிரான்சில் தவிக்கின்றனர்.

பெரு நகரங்களில் 20 000 ற்கும் அதிகமானோர் தங்குமிடத்திற்காகவும், உணவுக்காகவும் சமூகநல அமைப்புக்களை நாடுகின்றனர். இப் புள்ளி விபரங்கள் அரச நிவாரணம் பெறுவோர் பட்டியலில் இருந்தே பெறப்பட்டுள்ளன. ஆனால் நிவாரணம் ஏதும் பெறாமல் உள்ளவர்களையும், வசிப்பிடம் இல்லாதோரையும் கணக்கிட்டால் இத்தொகை மேலும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இவர்களுள் கால் பங்கினர் பகுதிநேர வேலை செய்பவர்களாக உள்ளனர். வசிப்பிடம் இல்லாதோருள் 9 வீதத்தினர் வீதிகளில் படுத்துறங்குகின்றனர். கணக்கெடுப்பில் உள்வாங்கப்பட்டவர்களுள் 10 வீதத்தினரின் வாடகை நலன்புரிச்சங்கங்களால் செலுத்தப் படுகின்றது.



## பணத்தால் மெத்தையை வாங்கலாம் தூக்கத்தை வாங்கமுடியாது


வட்டக்கச்சி இராமநாதபுரம் மக்கள் ஒன்றியத்தின்

தாய்முற்றம்

4. 8. 2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**லாச்சப்பல்** பகுதியில் Salle de Shoot ஒன்றை அமைப்பதற்கு பாரிஸ் 10 நகரசபை தீர்மானித்ததைத் தொடர்ந்து அந்தப்பகுதி குடியிருப்பாளர்களால் தீவிர எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

Salle de Shoot என்பது போதைப் பொருளுக்கு அடிமையாகி விட்டவர்களில் கரிசனை கொள்ளும் ஒரு நிலையம்.
பிரான்ஸ் சட்டப்படி போதைப் பொருள் விற்பதும் வாங்குவதும் குற்றம். இருப்பினும் போதைப் பொருளுக்கு அடிமை யானவர்களை தெருவில் விடாது மனிதாபிமான–மாக அணுகும் முயற்சியே மாநகர சபையின் இத் திட்டம்.

இந்த Salle de Shoot நிலையம் உருவாக இருக்கும் 300 மீற்றர் சுற்றுவட்டத்துள் 8 கல்வி நிலையங்கள், 1400 குழந்தைகளுக்கான பராமரிப்பு நிலையங்கள், குழந்தைகள் விளையாடும் பூங்காக்கள் உள்ளன.

இந்த நிலையம் அமைவது போதைப்பொருள் பாவனையை மேலும், ஊக்குவிப்பதோடு.
பாவனையாளர், விற்பனையாளர் இந்த பகுதியில் அதிகளவில் உலாவ–வும் வழிவகுக்கும்.

இந்த நிலையம் அமைவது போதைப் பொருள் பாவனையாளரை எந்த வகையிலும் மீட்டெடுத்து நல்வழிப் படுத்தப்போவதில்லை.

இந்த விடயத்தில், அரசு தனது கடமையிலிருந்து நழுவுவதோடு, ஒரு பாரிய பொதுப்பிரச்சினையை நலன்புரிசங்கம் ஒன்றிடம் கைவிட்டுள்ளது.

எனவே எமது பகுதியில் இந்தநிலையம் அமைவதை நாம் முழுமையாக எதிர்ப்பதோடு,
அரசுக்கு பின்வரும் கோரிக்கை களையும் முன்வைக்கிறோம்.
1. போதைப்பொருள் பாவனையாளர்களை சமூகரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் மீட்டெடுப்பதற்கான வழி முறைகளை கண்டடைய வேண்டும்,
2. கார்து நோத் மருத்துவமனையில், போதைப்பொருளால் பாதிக்கப் பட்டவர்களுக்காக ஒரு மருத்துவப் பிரிவு உருவாக்கப்பட வேண்டும்.
3. இத்தகைய அபாயகரமான சமூக, மற்றும் உடல் ஆரோக்கிய பிரச்சினையிலிருந்து அரசு விலகி நிற்கக்கூடாது
4. போதைவஸ்து விற்பனைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப் படல் வேண்டும்.
என குடியிருப்பாளர்கள் தமது எதிர்ப்பு பிரச்சாரத்தில் வெளிப் படுத்தி வருகின்றனர்.

## வீடு வாடகைக்கு விடுவதற்கு வேண்டிய முக்கிய விதிகள் ...



○ பிரதான அறை குறைந்தது 9 சதுர மீற்றர் பரப்பளவும், 2, 20 மீட்டர் உயரமும் உள்ளதாக இருக்க வேண்டும்.

○ வாழத்தகுதியான முறையில் குடிதண்ணீர் வசதி Chauffage, கழிவு நீர் வெளியேறுவதற்கான வசதி, சமையல் செய்வதற்கான இடம் தண்ணீர் வசதியுடன், சுடுநீர் வசதி, மலசல கூடம், குளியலறை தனித்தனியாக சமையலறையில் இருந்து பிரித்து இருக்க வேண்டும்.

○ மலசலகூடம், குளியலறை நீங்கள் வாடகைக்கு விடும் வீட்டுக்கு உள் இருக்க வேண்டும். குளியலறையிலும் சுடுநீர் வசதி இருக்க வேண்டும்.

விதி விலக்காக தனிஅறை வாடகைக்கு விடும் பட்சத்தில் மலசல கூடம், குளியலறை வெளியில் ஒரே கட்டிடத்தில் இலகுவாக செல்லக்கூடியதாக இருக்கலாம்.

மற்றும் தண்ணீர் கசிவுகள் இருக்கக் கூடாது. மின்சார அமைப்புகள் பாதுகாப்பான முறையில் அமையப்பட்டிருக்க வேண்டும்


## யோகாசன வகுப்பு

பெரியவர், சிறியவர்களுக்கான தனி வகுப்புகள்



தொடர்புகளுக்கு :
ஜக்குலின்

01.45.48.82.40
06.08.02.68.21
சாம்றொக் கல்விநிலையம்
75014 பாரிஸ்




## பள்ளி ஆசிரியருக்கு ஐந்தாண்டுச் சிறை

**பராயம்** வராத 15வயது சிறுமியை பாலியல்ரீதியாக துன்புறுத்தியமைக்காக முன்னாள் பள்ளிஆசிரியர் ஒருவருக்கு ஐந்தாண்டுகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் பிரான்சில் உள்ள ருவன் (Rouen) என்ற இடத்தில் நடைபெற்றுள்ளது. இவர் 2004ம் ஆண்டிலும் பாலகர் மீதான பாலியல் துன்புறுத்தலுக்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடகைத் தாய்மார்கள் பெருகுகின்றார்கள்



பிரான்சிலும் வாடகைத் தாய்மார்கள் மூலம் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்வதைச் சில நாடுகள் சட்டப்படி அனுமதிக்கின்றன, சில நாடுகள் சட்டப்படி தடை செய்திருக்கின்றன. குறிப்பாக ஐக்கிய இராச்சியம் அனுமதிக்கின்றது. பிரான்ஸ் தடைசெய்திருக்கின்றது. ஆயினும் இம்மாதிரியான முறையில் குழந்தை பெற்றுக்கொள்வது நடைமுறையில் உள்ளது. இந்நாட்டில் ஆண்டுதோறும் 200 குழந்தைகள் பிறக்கின்றன.

குழந்தை பெறமுடியாத பெண்கள், கருப்பை இல்லாத பெண்கள், குடும்பமாக வாழும் ஒரே பாலான தம்பதிகள் முதலானோர், 'மற்றவருக்காகச் சுமத்தல்' - GPA – Gestation Pour Autrui எனும் இந்த முறையில் வாரிசுளை உருவாக்கிக் கொள்கின்றனர்.

. குழந்தையைப் பிரசவித்துக் கொடுப்பதுடன் வாடகைத்தாயின் பங்கு முடிந்துவிடுகின்றது. இந்தப் பெண் உயிரியல் தாயாகவோ அல்லது சமூகவியல் தாயாகவோ கருதப்படுவது கிடையாது. இப்பெண் வெறும் வாடகைத் தாய் மட்டும் தான்! சுமந்தவளுக்குத் தாய்ப்பாசம் இருக்காதா என்ன? சில வருடங்களுக்கு முன், சிவகுமார், இலட்சுமி, ஸ்ரீப் பிரியா நடித்து வெளிவந்த, 'அவன் அவள் அது' திரைப்படம் நினைவிருக்கிறதா? இலங்கை, இந்தியாவில் வாடகை மனைவிகள் பெருகிவருவது போல் ஐரோப்பாவில் வாடகைத்தாய்கள் பெருகிவருவது பிள்ளை ஒன்று இல்லை என்று ஏங்கும் குடும்பங்களுக்கு வரப்பிரசாதமாக இருப்பதால் சட்டம் GPAயைக் கண்டும் காணாதமாதிரி விட்டிருக்கின்றது.

## யூலை, ஓகஸ்றால் மெலிந்த பெப்ரவரி



தற்காலத்தில் உள்ள கலண்டர் முறை முற்காலத்தில் ரோமானிய அரசர்கள் கொணடுவந்த நடைமுறை. இந்த ரோமானிய அரசர்களில் முதலானவர் ஜுலியஸ் சீசர். இரண்டாமவர் ஓகஸ்ற் சீசர். ஜுலியஸ் காலத்திற்கு முன் 301 நாட்கள் கொண்ட பத்துமாதங்களே இருந்தன. இவர் பத்து மாதங்களுடன் புதிதாக ஜனவரி, பெப்ரவரிகளைச் சேர்த்து 365 நாட்கள் கொண்ட பன்னிரண்டு மாதங்கள் ஆக்கி, ஐந்தாவது மாதமாக இருந்த கின்ரிலிஸ் பெயருக்குப் பதிலாகத் தன்பெயரை இட்டு ஜுலியுஸ் – julius என அழைக்கக்கட்டளை இட்டார். இதுவே ஆங்கிலத்தில் ஜுலை ஆனது. தன்பெயரில் உள்ள மாதம் விசேடமாக இருக்க வேண்டும் என்பதற்காக 30 நாட்கள் கொண்டிருந்த பெப்ரவரியிலிருந்து (பெப்ருஅருஸ்) ஒரு நாளை எடுத்து யூலைக்குச் சேர்த்து 31 நாட்கள் ஆக்கினார்.

ஜுலியஸுக்குப் பின் வந்த ஓகஸ்ற் சீசரும் மாதங்களிலும் கைவைத்தார். ஜுலியஸுக்குப் பின் வந்த செக்ரிலிஸ் மாதத்தை ஓகஸ்ருஸ் - augustus எனப் பெயர் மாற்றியதோடு, பெப்ரவரியிலிருந்து ஒரு நாளை எடுத்து தன்மாதத்தை 31 ஆக்கினார். இதனால் பாவம் ! பெப்ரவரி 28 நாட்கள் கொண்டதாக மெலிந்தது.

| இலத்தீன் | பிரஞ்சு | ஆங்கிலம் | ஜேர்மன் |
|---|---|---|---|
| Februarius | février | February | Februar |
| julius | juillet | July | Juli |
| augustus | août | August | August |

## 91 வயதிலும் 12 ஆம் வகுப்பு பரீட்சை எடுத்த மாணவர் !

BAC – 'பாக்' 2013 வெற்றிப்பெறுபேறுகள் உயர்கின்றன !

பிரான்சில் பாக் – BAC எனப்படுகின்ற 12ஆம் வகுப்புக்கான ஆண்டுப் பரீட்சை வழமைபோல் ஜுன் நடுப்பகுதியில் இடம்பெறுகிறது. ஜுலைத் தொடக்கப்பகுதியில் பெறுபேறும் வெளியாகிறது. மாணவர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பாக் எனும் தகுதிச்சான்றிதழ், தேடும் வேலைக்கு அளவுகோலாகவும் பட்டப்படிப்புக்குத் திறவுகோலாகவும் அமைகிறது. குறைந்த பட்சம் பாக் சான்றிதழ் வைத்திருப்பதை வாழ்க்கையின் கௌரவமாக பிரஞ்சியர் கருதுகின்றனர். பாக், Bac générale, Bac téchno, Bac pro என 3 பிரிவுகள் உண்டு.

2013இல் 660.000 மாணவர்கள் தோற்றினார்கள். இவர்களில் 91 வயதுடைய ஒருவரும், 13 வயதுடைய ஒருவரும் அடங்குவர். பிரஞ்சு வரலாற்றிலேயே 91 வயதில் பரீட்சை எடுத்த மனிதர் இவரே !

BAC - Baccaulauréat

| | Bac générale | Bac téchno | Bac pro |
|---|---|---|---|
| 2013. | 91.9 % | 86.4. % | 78.5. % |






91 வயதில் சக்கரநாற்காலியில் வந்து பரீட்சை எழுதும் முதுமாணவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆத்தி சூடி படிக்கும் 'தல'



ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம் என ஔவையார் கூறியதை உணர்ந்த, அஜீத்குமார் தினமும் ஔவையாரின் ஆத்திசூடியை மட்டும் படிக்கிறார். தல என பெருமையாக அழைக்கப்படும் அஜீத் ஆத்தி சூடியைப் படிப்பதோடு மட்டும் நின்று விடாமல் குறுந் தகவல் சேவை வழி ஆது Short Message Service வழி , குறுக்கமாகச் சொன்னால், SMS வழி, தினம் ஓர் ஆத்திசூடியைத் தன் நெருங்கிய நண்பர்களுக்கு அனுப்புகின்றாராம் !

ஆத்தி சூடி வள்ளுவரின் அக்கா எழுதிய பின் மகாகவியும் எழுதியிருந்தார், கடைசியாக பாவேந்தரும் எழுதியிருந்தார்.





| ஔவையார் | பாரதியார் | பாரதிதாசன் |
|---|---|---|
| தோற்பன தொடரேல்<br>நூல் பல கல்.<br>இளமையில் கல்.<br>தையல் சொற் கேளேல்.<br>ஆறுவது சினம். | தோல்வியின் கலங்கேல்.<br>நூலினைப் பகுத்துணர்.<br>கல்வியதை விடேல்.<br>தையலை உயர்வு செய்.<br>ரௌத்திரம் பழகு. | தோல்வி ஊக்கந்தரும்.<br>நூலும் புளுகும்.<br>கல்வி கற்கண்டு.<br>பெண்ணோடாண் நிகர்.<br>சீறினாற் சீறு. |

## மண்டெலாவுக்கு கலாநிதி தந்த பல்கலைக்கழகங்கள் எத்தனை!

மக்கள் அனைவராலும் இரண்டாம் பேச்சில்லாமல் மதிக்கப்பெறும் வரலாற்று நாயகன் நெல்சன் மண்டெலா. அப்பெருமகனுக்குக் கௌரவ டாக்டர் – கலாநிதிப் பட்டங்கள் வழங்கிப் பெருமைப் படுகின்றன உலகப் பல்கலைக்கழகங்கள் பல. இவ்வளவு தொகையான பல்கலைக்கழகக் கௌரவ பட்டங்களை இதுவரைக்கும் எவரும் வாங்கும் தகுதி பெற்றிருக்க வில்லை. இதுவரைக்கும் 33 பல்கலைக்கழகங்கள் கௌரவ டாக்டர் பட்டங்கள் வழங்கி பெருமைப்பட்டுக்கொண்டன. அவற்றில் பத்துப் பல்கலைக்கழங்கள் கீழே தரப்பட்டிருக்கின்றன.



1. நியூயோர்க் நகரின் நகரக் கல்லூரி.
2. ரோறென்ரோ யோர்க் பல்கலைக்கழகம்.
3. பிரித்தானியா லங்காஸ்ரர் பல்கலைக்கழகம்
4. புருசெல்ஸ் பல்கலைக்கழகம்
5. நெதெர்லாந்து லெய்டென் பல்கலைக்கழகம்
6. கியூபா – ஹாவன்னா பல்கலைக்கழகம்
7. ஜேர்மனி லீப்ஸிக் கார்ல் மார்க்ஸ் பல்கலைக்கழகம்
8. வெனிசுலா காராபோபோ பல்கலைக்கழகம்.
9. பிரான்ஸ் பாரிஸ் சோர்போன் பல்கலைக்கழகம்
10. இத்தாலி பொலொக்னா பல்கலைக்கழகம்


**டியூசன் வகுப்புகள் Soutien Scolaire**

Ecole : GS, CP, CE1, CE2, CM1, CM2, CLIN..
Collège : 6e, 5e, 4e, 3e, Segpa... Cap, BEP.
Lycée: Seconde, Première, Terminale, BTS..
Bac: S, ES, L, STI, STAV, ST2S, STL, Pro

அனைத்துப் பாடங்களும்
பிரெஞ்சு ஆசிரியர்கள்
Toutes les matières Scolaires
Cours de langues

மொழி வகுப்புகள்
Le français - பிரெஞ்சு
Le tamoul - தமிழ்
L'anglais - ஆங்கிலம்

**Sachchi education – Annamalai university**
70, rue Philippe de Girard 75018 Paris
Tél : 01 46 07 16 00 / 01 60 28 39 12 / 06 52 66 30 01
E- mail : sachchithananantham@gmail.com



**நிலா**
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**CHANGE MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**
**M.G.A. Coiffure**
20, Rue Roger Salengro - 93700 Drancy

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

**SACHI EDUCATION**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS COIFFURE**
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
57, Rue Louis Blanc - 75010 Paris

**MGR VIDEO**
5, Rue Perdonnet - 75010 Paris

**SARL VARNISHA COIFFURE**
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**ஜீவனா சலூான்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**SHAEE CASH & CARRY**
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**RESTAURANT PARADISE**
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

**அம்பாள் ஸ்ரோஸ்**
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

**FUN TELECOM**
139, Av.de St.Ouen - M°: Pte de St. Ouen)


உன் இதயம்
ரோஜா மலராக
இருந்தால்
பேச்சில்
அதன் வாசனை
தெரியும்



எமது அச்சகத்தின் விளம்பர வெளியீடு
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாயத்துறை அமைச்சர் Stéphane Le Foll

பெருவிநியோக அங்காடிகளின் பிரமாண்டமான தோற்றமும், அதன் விற்பனை முறைகளும், பொருட்களில் குறிக்கப்படும் கால வரம்பில் பின்பற்றப்படும் முறையும் உணவு வீணடிப்பிற்கான முக்கியகாரணி களாக கருதப்படுகின்றன.

குறிப்பாக கால எல்லை இடும்முறையில் (date limite d'utilisation optimale) மாற்றம், மற்றும் நுகர்வோருக்கு தேவையான அளவு பொருளை மட்டும் விற்பனை செய்யும் முறை போன்றவற்றிற்கான விதிமுறைகளை அரசு மாற்றி அமைக்கவுள்ளது. இவை உணவகங் களுக்கும் பொருந்தும்.

அரசின் இத்திட்டங்கள் 2014 ற்குள் செயற்படுத்தப்படும் எனவும், விவசாயக் கல்வி, ஹொட்டல் மற்றும் உணவுசார் உயர் கல்வியாளர்களுக்கு உணவு வீணடிப்பதை தடுப்பதற்கான விசேடபயிற்சி வகுப்புகள் ஒழுங்கு செய்யப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

பிரான்சைப் பொறுத்தவரை முதல் முறையாக இத்தகைய தொரு திட்டத்திற்கு அனைத்து தரப்பினரது ஒத்துழைப்பையும் அரசு கோருகிறது. விவசாயிகள், விவசாயத்தொழிற்துறையினர், பெருவிநியோக அங்காடிகள், உணவகங்கள், சில்லறை வியா பாரிகள் மற்றும் உணவு வீணடிப்பில், பெரும் பங்கு வகிக்கும் நுகர்வோராகிய பொதுமக்களும் தீவிர நடவடி க்கைகள் எடுக்க நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். 2025 ஆண்டிற்குள் இவ் வீணடிப்பினை அரைப்பங்கா க்குவதே அரசின் திட்டமாகும். இது வெறுமனே ஒரு பொருளா தார பிரச்சினை மட்டுமல்ல சுற்றுச்சூழல்சார் பிரச்சினையும் கூட என அமைச்சர் மேலும் அறைகூவல் விடுத்துள்ளார்.

## இப்படியும் நடந்தது!

அண்மையில் பிரான்சில் நடைபெற்ற Brétigne புகையிரதவண்டி விபத்தில்சிக்கி பதைபதைத்துக் கொண்டிருந்த பயணிகளின், உடைமைகள், அந்த கோரநிலையிலும் களவாடப்பட்டிருக்கின்றன. அவசர உதவிக்கு விரைந்த முதலுதவி வாகனங்கள்மீது கற்களை வீசி அவர்களை துரித கதியில் இயங்கவிடாது தடுத்தபடி திருட்டுச்சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. மனிதாபிமானமற்ற இச்செயல் நாம் எங்கே சென்று கொண்டிருக்கிறோம் என்ற கேள்வியை உரத்து எழுப்புகிறது என விபத்துநடந்த Essonne பகுதி பாராளுமன்ற உறுப்பினர் NKM கண்டனம் தெரிவித்துள்ளார்.



**விழிப்பதற்கே உறக்கம்!**
**வெல்வதற்கே தோல்வி!**
**எழுவதற்கே வீழ்ச்சி!** - பிரவுணிங்

நிலா உங்களுக்கு பிடித்திருக்கிறது. மகிழ்ச்சியைத் தருகிறது என நீங்கள் கருதினால், நிலாவில் பிரசுரமாகும் **விளம்பரதாரர்களுக்கு நன்றி சொல்லுங்கள்!**

நிலா தொடர்பான, அபிப்பிராயங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம் www.nilafrance.com

தோற்றம் கொண்டன. 1990கள் வரை பெருவிநியோக அங்காடிகளின் பொற்காலம் என்றே சொல்லலாம். அதன் பின்னர் ஏற்பட்ட பொருளா-ாதார வீழ்ச்சிகளால் அவை நெருக்கடிக் குள்ளாயின.

இன்று பிரான்ஸ் 1936 பெரு விநியோக அங்காடிகளை தன்வசம் கொண்டுள்ளது. பிரான்சின் மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது அங்காடிகளின் தொகை அதிகமாகவே காணப்படுகின்றது.

5400 சதுரமீட்டர் ஒரு பெரு விநியோக அங்காடியின் சராசரி அளவாகக் கணிக்கப்படுகிறது. மிகப்பெரிய அங்காடி 25000 சதுர மீற்றரைக் கொண்ட தெனவும், 94 சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் தொடர்ந்து செல்லும் வாடிக்கையாளர்கள் எனவும், இந்த 1963 பெருவிநியோக அங்காடிகளும் வருடத்திற்கு 87 மில்லியாட் வருவாய் ஈட்டுகின்றன எனவும் கணக்கெடுப்புகள் தெரிவிக்கின்றன.

ஆனால் தற்போதைய நிலையில் 69 சதவீதமான பிரான்ஸ் நாட்டவர்கள் இப்பெரு விநியோகஅங்காடிகளுக்கு செல்வது அலுப்பூட்டும் விடயமாகக் கருதுகின்றனர். பொருளாதாரச் சிக்கல், அதிகரித்து வரும் எரிபொருள் விலை, வாழும் பகுதியை விட்டு விலகி இருத்தல், விலைத் தெரிவுக் குழப்பம், தெரிவு செய்யப்படும் பொருளின் தரம், விஸ்தீரணமான பிரதேசம் போன்ற காரணிகளால் இன்று அங்காடிகள் மக்களுக்கு அலுப் பூட்டத்தொடங்கியிருக்கின்றன. ஆரம்பத்தில் கவர்ச்சியாக இருந்த காரணிகள் இப்போது அலுப்பைத் தருகின்றன. பெருகி வரும் E- வணிகம் மற்றும் Drive வணிக முறை, சிறிய சூப்பர் மார்க்கற் போன்றவற்றின் வளர்ச்சியும் பெருவிநியோக அங்காடி களுக்கு நெருக்கடியைக்கொடுக்கத் தொடங்கிவிட்டன.

Drive வணிக முறை : நீங்கள் வீட்டிலிருந்தே கணனியில் பொருட்களை தெரிவு செய்து ஓடர் கொடுத்து விட்டு வாகனத்தை எடுத்துக் கொண்டு சென்றால் உங்கள் பொருட்கள் தயா ராக பொதியாக இருக்கும். பெற்று வரவேண்டியது தான். இவ்வணிக முறை கிடு கிடுவென வளர்ந்து பிரான்சில் 1600 அங்காடிகளாக உயர்ந்து விட்டது.

**கிருஷ்ணா அச்சகம்**
தரம் - குறித்த தவணை - நியாய விலை
☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25
e-mail: krishnafrance@yahoo.com
73, Rue Doudeauville - 75018 PARIS (Métro : Château Rouge)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org